## கனவைச் சிதைத்த கலன்கள்!

#கனவு;
ஆழ்மனத்தின்,
அற்புதத் தோணி!
நிகழ்வுகளில் சுகந்தரும்,
நித்திலப் பூமணி!

#நாளைய ஏக்கமாய்,
நகரும் நாட்களில்;
மனத்தின் பூவாய்,
உற்சாக மூட்டும்!

#அந்தக் கனாக் காலத்தின்,
கன பரிணாமங்கள்;
முகிழ்ந்திடும் எனவாய்,
மகிழ்ந்திடும் போது;
சிதைந்து போகும்,
முகம் தெரியாமல்!

#நேர்வழி நடந்தும்,
நீங்காத் துயர்நிலை!
இடையில் பிணைந்த,
ஒருவழிப் பாதை!
இறுக்கியே யாவையும்;
தன்வயப் படுத்தும்!

#துவண்ட மனமோ;
தோள்வலி யின்றித்,
துயருடன் சேரும்!

#கனவுகள் எல்லாம்,
காணாமல் போகும்!

#புதிய கலன்களோ;
நீரினில் ஆடி,
நிலவினைத் தேடும்,
தன்மயமாக்கியப்,
பெருமையில் வாழும்!

#கனவைச் சுமந்து,
கண்களில் வளர்த்த;
அற்புத மனமோ,
காகிதக் கப்பலாய்;
நீரினில் மூழ்கும்!

கவிவளவன்,
16-10-2019 (12.20 AM)

## காலக் கவிஞன் கண்ணதாசன்



# காலன் உன் கணக்கில்,
புள்ளி வைத்தபின்;
மண்ணில் விழுந்த,
பிள்ளைகளுக் கெல்லாம்;
மீசைகூட நரைத்து விட்டது!

# உன் கவிதையும் பாட்டும்;
தலைமுறை கடந்து,
இன்னும், ஒலித்துக்
கொண்டுதானிருக்கிறது!
# வாழ்வின், வளங்களும்; கலன்களும்;
உனது வரிகளில் மின்னும்!
பலருக்குப் பார்வையும் நல்கும்!
எட்ட முடியாத உயரத்தில்,
நீ இன்னும் நிறைகிறாய்!

# இன்னும் சில ஆண்டுள்;
உனது நூற்றாண்டு!
அது, நீ
மண்ணில் மறைந்த;
அரை நூற்றாண்டு!

# சங்கப் புலவனோடு,
கம்பனையும், வள்ளுவனையும்,
சேர இளவல் செப்பிய வரிகளையும்,
எளிமைப் படுத்தி,
எங்களுக்களித்த நீ,
பாரதி ததலைமுறை ஈந்த,
எங்கள் தலைமகன்!

# மண்ணில்,
மானுடம் சாயும் வரை,
தமிழும் வாழும்!
நீயும் வாழ்வாய்!
இன்னொருச் சங்கம் செய்த,
இளவலாய் நிறைந்து!
- **கவிவளவன்**
**17-10-2019 (7.20 AM)**

**இயற்கைவளம்**

\# காலச்சுவட்டில்,
இறைவன் எழுதிய;
இன்னிய கோலம்!

\# மூலமும், முடிவும்,
தெரியா வாழ்வில்;
திகழ்ந்திடும் பேரெழில்!

\# ஆலம்விழுதுகள் அசைந்து,
பாடும் குயில்களின்;
முகவரி தேடும்!

\# கோலம் கலைக்கும்,
பிள்ளையாய்;
அதுவோர்;
இயன்நிலை யாகும்!

09-10-2019 (23.10)

## இன்றைய வைகறை!

கொப்பளித்தது பூமி!
மரங்கள்;
இடுப்பொடிக்கும் வேகம்!

காணாமல் போயிட,
குளிர்ந்த வருடல்,
பூமிப் பரப்பில்,
சுவடுகள் இல்லை!

வாழும் பூதத்தின்,
மீதான,
நிறைந்த பூதத்தின்,
பாசத்தை,
உயிர்க்கும் பூதம்,
உறவாடிக் கெடுக்க,
தூரத்தில்,
என்றும் காய்க்கும்;
பூதம் மட்டுமே,
கரங்களைநீட்டும்;
பூமிக்கு!

- **கவிவளன்**

25-04-2020 (7AM)

# நீதான் இறையோ?

உலகாளும் பெருநிதியே உன்பெயர்தான் இறையோ!
இறப்புக்கும் பிறப்புக்கும் இடையே ஏனிந்த வாழ்வோ!
தோன்றலும் மறைதலும் தொடர் எனில் ,ஏனிந்த கூத்தோ!

யார் இட்ட விதியோ! பிறத்தல் வலியோ!
இறத்தல் மகிழ்வோ! அல்லது இதுவோ அதுவோ!
ஒளிரும் ஞாயிறும் ஒரு நாள் பட்டுப் போக,

பிரிந்தவை யாவும் கபளீகரமாகி ,காலம் ;
எதிர்திசை செல்லும் என்பது அறிவியல் பார்வை!
உன் படைப்புகள் மரணிக்கும் போது ,

ஏதோ ஒன்று பிரிவதாய் உணர்கிறோம்!
அதனை இயக்கும் இயங்கு சக்தியே!
நீதான் காலம் எனும் கருப் பொருளோ!

கனவாய் நிறையும் இறையோ!
பிறப்பும் இறப்பும் இயன்நிலை யாயின்;
பிறப்புக்கு முன்னும், இறப்புக்குப் பின்னும்,

என்ன நிகழ்கிறது? நிலையான உயிரோடு,
நிலையான நீ நிகழ்த்தும்
இந்த ஆட்டத்தின் எல்லை எது?

**கவிவளவன்**
**2/9/2020, 6:17 am**

## காலச் சுவடு!

காலச் சுவட்டில்,
எத்துனை வினாக்களுக்கு;
விடை கிடைக்கிறது?

தோன்றியும், மறைந்தும்;
மறந்து போனதுமாய்,
எத்துனைப் பதிவுகள்!

புதிய பாதை; புதிய கோணமுமாய்,
மாறும் பரிணாமங்கள்!

ஆரவாரமாய் ஓடிக் கொண்டே,
இருந்துவிட்டு, ஒரு நாள்;
நிறுத்துப்பார்க்கும் போது,
ஏதோ ஒன்றைப்;
பெற்றதாகவோ, இழந்ததாகவோ தோன்றும்;
அதுவே, நம் பதிவு! ***26-02-2015***

## மனம்! (மு.தே.அ. பக்-30)

தடைகளையும், மடைகளையும்,
காணாது;
தடதடவென்று,
ஓடுவதுதான் மனம்!

அது அறிவின் ஓங்கார,
மயக்கம்!
அறிவையும் அலைக்கழிக்கும்!
ஆற்றலைப் புறக்கணிக்கும்!

தனக்குத் தானே,
பலவும் பேசும்!
உமையாய் கனவுகளை,
ஓய்வின்றிச் செய்யும்!

அதனைக் கட்டுப் படுத்தினால்,
கனவுகளைச் செப்பமிடலாம்!
ஆளுமையாய்,
அறிவைச் செய்யலாம்!

மனமே அறிவின் கொற்றம்!
ஆற்றலின் ஊற்று!
மனத்தை நெய்வோம்!
மருவின்றி வாழ்வோம்!

- **கவிவளவன்** 27-09-2021 (12.05 ஏ.எம்.)

## பெண் குழந்தைகள் தினம்!

தன்னைச் சுமந்த கரங்கள்;
இயன்நிலை வாழ்வின்,
அறிவைச் சொல்லும்!

தன்கரம் பற்றிய;
மகளின் மனத்தால்,
தங்கச் சுரங்கமாய்,
அறிவை செய்யும்!

மகனோ, மகளோ,
தன்கரம் ஈந்த,
பெண் குழவி தன்னால்,
மண்ணகம் போற்றிய,

மாண்புகள் தெரிய,
சிவிகையால் உள்ளம்,
சிரித்தே மகிழ்ந்திடும்!
-- கவிவளவன்
11-10-2020

## கறிக் கோழி!

# கறிக் கடையின் முன்னே;
கூண்டுக்குள் கோழிகள்!
இன்றோ; நாளையோ;
இறையாகும் நிலைப் பாடு!

# ஒன்றையொன்று;
அழித்தே யுண்ணல்,
இயற்கை எழுதிய விதி!

அந்த இறையவன்,
செய்த விதியென,
மனித மனங்களில்,
தொடரும் பயணம்!

# கழுத்தை திருப்பி,
காலும் முடக்கப் பட்டு,
ஒன்றோடு ஒன்று,
உராய்ந்துகொண்டு,
முடங்கிய நிலையில்;
முணுமுணுக்க முடியாமல்,
மூச்சுச் திணறும்;
கோழிகள் கூண்டுக்குள்!

# தூக்கு தண்டனைக்கு முன்னே,
ஆரோக்கியம் பரிசீலிக்கப் படுதல்;
மானுடவியல் நீதி!

அது,
மனிதன் மனிதனுக்குச் செய்தது!
மற்ற உயிர்கள்;
எந்தமன்றத்தில் வழக்குரைக்கும்?

மாட்டுக்கு மட்டும்,
மனுநீதி சொன்ன கதை,
இந்த மண்ணில் உண்டு!

**கவிவளவன்**
05-10-2021(10.30 ஏ.எம்)

## *புத்தகத் திருநாள்!*

நூல் பல கல்!
நூலைப் படி, தமிழ் நூலைப் படி!
நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை!
கற்றோரும் நூலோரே!
உற்றதாம் கல்வியின் அறிவைத் தருவதும் நூலே!
தைப்பதும் நூலே,
இணைத்துத் தைப்பதும் நூலே!
பூச்சிகள் உமிழ்நீர் காய்ந்து,
சுவற்றில் ஆடுதல் காண்பர்,
நூலாம் படை என்பர்!

சுவற்றின் சித்திரம்,
செதுக்கிய படிமம்,
ஓலையின் சுவடிகள்,
இன்றோ வண்ணக் காகிதம்!

எல்லா வளர்ச்சியும்,
அறிவின் நுகர்வை அளித்து நிறையும்!
நூலோர் அறிவே,
நிறைக்கும் கலனாம்!
புத்தகம் போற்றி அறிவைச் செய்வோம்!

*கவிவளவன்* 23-04-2022

## *வெற்றுக் கனிகள்!*

\# வெற்றியும், தோல்வியும்,
வேதனை செய்யும்;
மனத்தின் விளையாட்டு!

\# கற்ற கல்வியின் அறிவு,
அகப்படாத போது,
மனம் எங்கோ முகாமிட்டிருக்கும்!

\# வெற்றியின் மமதை,
ஒருநாள் வேதனை யிடும்போது,
தோல்வியின் வலியைவிட,
அதிகமாய்த்துடிக்கும்!

\# வெற்றியும், தோல்வியும்,
காலம் எழுதும்;
காட்சிப் பிழை!

\# பூனையின் வாயில்,
அகப்படாத எலி;
எத்துனைநாள் தனித்தே வாழும்?

\# விருப்பு, வெறுப்பு,
அற்ற மனமே;
வெற்றி தோல்வி விளையாட்டில்,
ஜெயிக்க வைக்கும்!
*கவிவளவன்* (மு.தே.அ பக் -33)
05-10-2021 (11.10 பி.எம்.)

## மனமே அறிக!

\# தூற்றுபவர் தூற்றட்டும்!
நாம், தொடர்ந்து பயணிப்போம்!

வெற்றியும் தோல்வியும்,
வேறு வேறு அல்ல!
முயற்சி செய்பவருக்கே, அது,
முகவரி தருகிறது!

மனத்திண்மையோடு,
மறுபடி எழுந்திட,
தோல்வியே தூண்டுகோலாகிறது!

\# ஒவ்வொருவருக்கும்,
ஒரு திறமை, தனித் தண்மை!

ஒன்றுடன் ஒன்றை ஒப்பீடு
செய்தால்,
உலகளாவிய,
துன்பமே நிகழும்!
ஒன்றை யொன்று,
அழித்தே யுண்ணல்;
உலக நியதி ஆகிட,

\# காணொளியில் காணும் போதுதான்,
சிறுத்தையின் பாய்ச்சல் சீராய்த் தெரியும்!

\# இயற்கையோ, இறையோ,
ஏதோ ஒன்று, நம்மை ஆள்கிறது!

எழும் போராட்டங்களே,
நம்முள்;
புதியன விளைவிக்கிறது!

\# ஓட்டப் பந்தய வீரனோடு,
ஓட்டப் பந்தய வீரனை;
ஒப்பீடு செய்வதே தவறு எனும்போது,
கரகாட்டக் காரனை,
ஒப்பீடு செய்தால் எப்படி?

இப்படித்தான்,
நமது மனம்; தோல்விகளால்,
கட்டுவிக்கப் படுகிறது!

\# இயற்கையோ; கடவுளோ,
யாவருக்கும், யாவற்றிற்கும்;
தேவையானதை,
தொகுத்தே வைத்துள்ளது!

\# புலி புல்லைத் திண்ண,
ஆசைப்படுவதாய்; மனித வாழ்வு
அலைக்கழிக்கப் படுகிறது!

\# தன்னையுணராத போது, ஆணவமும்;
உண்மையுணராத போது, பொறாமையும்;
தேவையில் நிலையாமல், பேராசையும்;
கொண்டு மனிதன்,
தன்னைத் தானே வீழ்த்திக் கொள்கிறான்!

யானைக்கு,
எல்லா மரமும்; செடியும் உணவாகும்!
எலிக்கோ, நெல்லும் மணியுமே!

\# கூந்தலிருப்பவளால்தான்,
பூ முடிக்க முடியும் எனும் மொழியுண்டு!
ஈறும் பேனும் இயைந்து வாழும் என்பர்!
இதுதான் வாழ்வியல்!

உண்மையுணர்ந்து,
தன்னை யுணர்ந்தால்,
மனிதன்,
ஒய்யாரமாய் வாழலாம்!

\# தேவையில், தேடலில்,
உண்மை அறிந்து,
இன்புற்று வாழ்வோம்!
கவிவளவன்,
13-02-2023 (07.20.ஏ.எம்)

மு.தே.அ.வ (பக் 54)